அடையாள இலக்கம்:

☐ ☐ ☐ ☐ ☐ ☐

**அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2009**

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 1

**மத்தியபிரிவு**
(8-10 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 1.00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

**அ) கோடிட்ட இடங்களைப் பொருத்தமான எழுத்துக்களால் நிரப்புக.** *புள்ளிகள்: 20*

1. பள்ளிக் _____ டம்

2. அரங் _____ ற்றம்

3. கறுப் _____

4. சந் _____ ரன்

5. க _____ ணீர்

6. அன் _____ சிப்பழம்

7. பொ _____ மை

8. வி _____ ழக்கிழமை

9. வி _____ யாட்டுப் போட்டி

10. தொ _____ நோக்கி

| புள்ளிகள் | |
|---|---|

**ஆ) கீழே கோடிடப்பட்ட சொல்லுக்கு வாக்கியத்திற்கேற்ற *ஒத்த கருத்துள்ள* சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் எழுதுக.**

***புள்ளிகள்: 20***

1. **மன்னன்** நீதி தவறாது ஆண்டுவந்தான்.

   1. தலைவன் 2. அரசன்
   3. பிரபு 4. சோழன் (..............................)

2. காலை எழுந்ததும் மாணவர்கள் **தினமும்** படிக்கவேண்டும்.

   1. கிழமையும் 2. நாள்தோறும்
   3. மாதமும் 4. வருடமும் (..............................)

3. பெண்கள் சிலர் கையில் **வளையல்கள்** அணிவார்கள்.

   1. காப்புகள் 2. சங்கிலிகள்
   3. தோடுகள் 4. மேகலைகள் (..........................)

4. **மிருகங்கள்** காட்டில் வாழ்கின்றன.

   1. பாம்புகள் 2. பறவைகள்
   3. விலங்குகள் 4. மந்திகள் (..............................)

5. மகாத்மா காந்தி அவர்கள் **சத்தியம்** தவறாது வாழ்ந்தார்.

   1. நீதி 2. அன்பு
   3. பண்பாடு 4. உண்மை (..............................)

6. நரி **தந்திரம்** உள்ள ஒரு மிருகம்.

   1. வல்லமை 2. கெட்டித்தனம்
   3. சூழ்ச்சி 4. கோழைத்தனம் (........................)

7. பிரதம விருந்தினருக்கு **பூ மாலை** போட்டனர்.

   1. சந்தனமாலை 2. செயற்கைமாலை
   3. காசுமாலை 4. மலர்மாலை (.........................)

8. மக்கள் **பணம்** கொடுத்துப் பொருள்களை வாங்குவார்கள்.

   1. பொன் 2. காசு
   3. மணி 4. முத்து (..............................)

9. நோயாளியைக் குணப்படுத்துவோரை **வைத்தியர்** என அழைப்போம்.

   1. மருத்துவர் 2. தாதியர்
   3. அறிஞர் 4. ஆசிரியர் (..............................)

10. **பழங்கள்** உண்பது உடலுக்கு நல்லது.

   1. காய்கறிகள் 2. கீரைகள்
   3. தானியங்கள் 4. கனிகள் (..............................)

| **புள்ளிகள்** | |
|---|---|

**இ) கீழே கோடிடப்பட்ட சொல்லுக்கு *<u>எதிர்க்கருத்துள்ள</u>* சொல்லைத் தெரிவு செய்து அதன் எண்ணை எழுதவும்.**

***புள்ளிகள்: 20***

1. நாம் **<u>சுறுசுறுப்பாக</u>** வாழ எறும்புகள் எமக்குக் கற்றுத்தருகின்றன.

   1. நன்றாக　　2. சோம்பலாக
   3. கெட்டித்தனமாக　　4. அழகாக　(………………………...)

2. **<u>தோல்வியைக்</u>** கண்டு மனம் தளரக் கூடாது.

   1. வெற்றியை　　2. பசியை
   3. தாகத்தை　　4. நேர்மையை　(……………………...)

3. **<u>புதிய</u>** பொருள்களை மக்கள் விரும்பி வாங்குவார்கள்.

   1. மரபான　　2. நவீனமான
   3. விலையான　　4. பழைய　(………………………...)

4. சிறந்த மாணவர்கள் பள்ளிக்குப் **<u>பெருமை</u>** சேர்க்கின்றனர்.

   1. வெளிச்சம்　　2. சிறுமை
   3. பிரகாசம்　　4. தனிமை　(………………………...)

5. **<u>பொதுநலம்</u>** கருதி வாழ நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

   1. உடல்நலம்　　2. சுயநலம்
   3. மனநலம்　　4. சமூகநலம்　(………………………...)

6. வியாபாரிகள் **<u>இலாபம்</u>** பெற விரும்புகின்றனர்.

   1. பணம்　　2. நட்டம்
   3. உயர்வு　　4. பொன்　(………………………...)

7. அரிச்சந்திரன் **<u>உண்மை</u>** பேசுவதிற் சிறந்து விளங்கினார்.

   1. பொய்　　2. மெய்
   3. நேர்மையாக　　4. வசதியாக　(………………………...)

8. தமிழ் படிக்கும் **<u>விருப்பம்</u>** தமிழ்ப் பிள்ளைகளுக்கு இருத்தல் வேண்டும்.

   1. வெறுப்பு　　2. ஆர்வம்
   3. விவேகம்　　4. சாதுரியம்　(………………………...)

9. சூரியன் உதித்ததும் **<u>இருள்</u>** மறைந்து விடும்.

   1. மழை　　2. காற்று
   3. ஒளி　　4. தண்ணீர்　(………………………...)

10. சிறுவர்கள் **<u>இளமையில்</u>** கல்வியை நன்றாகக் கற்க வேண்டும்.

   1. சிறுமையில்　　2. குழந்தையில்
   3. முதுமையில்　　4. வறுமையில்　(……………………...)

| புள்ளிகள் | |
|---|---|

அடையாள இலக்கம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2009

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 2

<u>மத்தியபிரிவு</u> (8-10 வயதுப் பிரிவு)

**ஈ) கீழே கொடுக்கப்பட்ட எழுத்துக்களைக் கொண்டு பத்துச் சொற்களை உருவாக்குக.** ***புள்ளிகள்: 10***

ம் ப க் அ ல்
ட ச ப் வ க ட்
ய ர ம் ச்

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________
7. ______________________
8. ______________________
9. ______________________
10. ______________________

| புள்ளிகள் | |
|---|---|

**ஈ) கோடிட்ட இடங்களிற் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** *புள்ளிகள்: 30*

ஔவையார் என்ற பெயரை அறியாத சிறுவர்களோ பெரியவர்களோ இருக்கமாட்டார்கள். அவர் தமிழ் நாட்டில் (1)________________ பெண் புலவர் ஆவார். அவரைப்பற்றிப் பல கதைகள் (2) ________________. ஔவையார் பல பாடல்களைப் (3)________________.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள் ஆகிய நூல்களை (4) ________________ ஔவையார். அவர் அதியமானின் நண்பராக வாழ்ந்தவர். அதியமான் (5) ________________ நெல்லிக்கனியை உண்டு ஔவையார் நீண்டகாலம் வாழ்ந்தார் என்று கூறுவர். அவருடைய பாடல்கள் தமிழுக்கு (6) ________________ அளித்தன.

அற நூல்களில் காணப்படும் (7)________________ எல்லாம் எளிமையான முறையில் அவர் தம் பாடல்களில் எழுதியுள்ளார். அவருடைய (8)________________ மனப்பாடம் செய்வதற்கு மிகவும் ஏற்றவை. அத்துடன் அவர் கூறிய அறிவுரைகளை மக்கள் சுலபமாகப் (9) ________________ . எனவே நாம் அவர் கூறியபடி (10)________________ நம் வாழ்க்கை சிறப்பாக அமையும். உலகம் உள்ளவரை ஔவையாருடைய நூல்கள் யாவும் தமிழுக்குப் பெருமையும் சிறப்பும் தரும் என்பதில் ஐயமில்லை.

**பாடல்கள் பாடியுள்ளார் வாழ்ந்தால்**
**வாழ்ந்த கருத்துகளை உள்ளன**
**பின்பற்றலாம் கொடுத்த இயற்றியவர் பெருமை**

| புள்ளிகள் | |
|---|---|

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|